1978 செப்டம்பர் 1]

கல்லாற்றின் குறுக்கே பாலம்

*வினா 32—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரூர் வட்டம், நரிப்பள்ளி கல்லாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, ஆரூரிலிருந்து திருவண்ணாமலை வரையிலும் ஒரு நீண்ட பஸ் போக்குவரத்தும், சுமார் 40-க்கு மேற்பட்ட விவசாயிகளுடைய கிராமங்களைக் கொண்ட பெரும் போக்குவரத்தும் உள்ள பகுதி. அந்தப் பகுதியிலே நரிப்பள்ளி கல்லாறு என்ற இடத்திலே திடீரென்று அடிக்கடி பெரு வெள்ளம் ஏற்படுவதாலே போக்குவரத்துப் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. இது நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. இனியாவது அரசு பரிசீலித்து, அந்தப் பாலத்தைக் கட்ட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வேலையை முடிப்பதற்குக் குறைந்தது ரூ. 16 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு அதை எடுப்பதுபற்றி அரசு யோசித்து வருகிறது.

Bridge across Thiruvettar.

*33 Q.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to construct a bridge at Moovathungam across Thiruvettar river connecting Thottanaram and Parathapalli in Kanyakumari district; and

(b) if so, the details thereof?